**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண். 2/2023**

**இன்**

**அ.வ.எண். 239/2010**

1. வைரமுத்து
2. விஜயலெட்சுமி
3. சோழகிரி ----- மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தண்டபாணி (இறப்பு)
2. ஆர். குப்புராஜ் (இறப்பு)
3. வி. மாசிலாமணி ----- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. முருகசாமி
5. நாட்ராயன்
6. கலைச்செல்வி --- 1, 2, 3 புரோபோஸ்ட் பார்ட்டிகள்/ புரோபோஸ்ட் 4, 5, 6 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 15.11.2023 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் B. சரவணக்குமார் மற்றும் R. கண்ணன் ஆகியோர் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் M. சிவசாமி மற்றும் V.K.S.வேல்முருகன் ஆகியோர் முன்னிலையாகியும், 4 முதல் 6 புரோபோஸ்ட் பார்ட்டிகள்/புரோபோஸ்ட் 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.ஜெர்னின் சப்தமங்களராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் எதிர்உரை இல்லை என தெரிவித்த நிலையிலும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இந்த வழக்கின் 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தண்டபாணி மற்றும் குப்புராஜ் இறந்துபோனதால் அவரது சட்டப்படி சார்பாற்றுனர்களை சேர்ப்பதில் ஏற்பட்ட

அபேட்மெண்ட்டை செட்டசைடு செய்ய உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 22 ரூல் 9-ன்படி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி தண்டபாணி என்பவர் 21.10.2023 அன்று மதுரை அரசு மருத்துவமனையில் காலமாகிவிட்டார். அவருக்கு 1 முதல் 3 மனுதாரர்கள்/வாதிகள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். 1-ம் பிரதிவாதியின் மனைவி பல வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார். 1 முதல் 3 மனுதாரர்கள்/வாதிகள் தான் 1-ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். ஏற்கனவே 1-ம் பிரதிவாதியின் வாரிசுகள் வழக்கில் வாதிகளாக இருக்கும் காரணத்தால் புதிதாக அவர்களை சட்டப்படியான சார்பாற்றுனர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி குப்புராஜ் என்பவர் 24.07.2017 அன்று சிவகிரிப்பட்டி கிராமம், மருத்துவ நகரில் காலமாகிவிட்டார். 2-ம் பிரதிவாதிக்கு மனுவில் சொல்லப்பட்ட 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். 2-ம் பிரதிவாதியின் மனைவி வசந்தா என்பவரும், அவரது தாயார் பொன்னம்மாள் என்பவரும் 2-ம் பிரதிவாதிக்கு முன்பே காலமாகிவிட்டனர். எனவே 4 முதல் 6 எதிர்மனுதாரர்களை 4 முதல் 6 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே தண்டபாணி மற்றும் குப்புராஜ் இறந்துபோனதால் அவர்களது சார்பாற்றுனர்களை சேர்க்க ஏற்பட்ட அபேட்மெண்ட்டை ரத்து செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

3-ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதி 21.01.2023 அன்று காலமாகிவிட்டார். அவருடைய மனைவி 21.01.2023 வாதிக்கு முன்பே காலமாகிவிட்டார். 1-ம் பிரதிவாதியின் மற்ற வாரிசுகள் ஏற்கனவே வாதிகளாக இருந்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 2-ம் பிரதிவாதி குப்புராஜ் 24.07.2017 ஆம் தேதி காலமாகிவிட்டார். அவரது சட்ட வாரிசுகளை கட்சி சேர்க்க 90 நாள் கெடுவான 23.10.2017 ஆம் தேதிக்குள் மனு தாக்கல் செய்யாததால் அசல் வழக்கானது 2-ம் பிரதிவாதியைப் பொறுத்து 24.10.2017 அன்று அபேட்டாகி விட்டது. அபேட்மெண்டை ரத்து செய்ய 60 நாள் கெடுவான 23.12.2017 ஆம் தேதிக்குள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட 2054 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க மனுவினை 07.08.2023 அன்று தாக்கல் செய்துள்ளார். அபேட்மெண்ட் ரத்து மனுவானது அதே தேதியில் இ.ம.எண்.2/2023-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.1/2023 மற்றும் இ.ம.எண்.2/2023 மனுக்களில் 3-ம் பிரதிவாதியான மனுதாரரை மட்டும் கட்சி சேர்த்து மனு

தாக்கல் செய்யாமல் அசல் வழக்கு அபேட்டான நிலையில் மேற்படி இரு மனுக்களிலும் 2-ம் பிரதிவாதியின் சட்ட வாரிசுகளை 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 புரோபோஸ்டு பிரதிவாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கில் கண்ட 1, 2 பிரதிவாதிகள் காலமான நிலையில் அவர்களுடைய சட்ட வாரிசுகளை கட்சி சேர்க்க நீதிமன்றம் இதுவரை அனுமதி வழங்காத நிலையிலும், திருத்தல் மனு தாக்கல் செய்து குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்புகளில் பெயருக்குப் பின்னால் இறப்பு என்று குறிப்பிட்டு திருத்தம் செய்ய நீதிமன்ற அனுமதி பெறாமல் மனுதாரர்கள் Suomotto வாக திருத்தம் செய்து மனுத் தாக்கல் செய்திருப்பது Abuse of process of law and court ஆகும். எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் 1-ம் பிரதிவாதி 21.10.2023 அன்று இறந்துவிட்டதாகவும், 1-ம் பிரதிவாதிக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சங்கதி 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

6.2. 2-ம் பிரதிவாதி குப்புராஜ் 24.07.2017 அன்று காலமாகிவிட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சங்கதியும் 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. மாறாக 2-ம் பிரதிவாதியின் இறப்பிற்குப் பிறகு மேல்நடவடிக்கைகள் எடுக்க காலதாமதத்திற்கான மனு மற்றும் அபேட்மெண்ட் ரத்து மனு ஆகியவற்றில் 4 முதல் 6 பிரதிவாதிகளைத் தரப்பினர்களாக சேர்த்துள்ளது தவறு என்றும், நீதிமன்றம் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் திருத்தம் செய்ய அனுமதி வழங்காத நிலையில் இறப்பு என்று குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளது தவறு என்றும் 3-ம் எதிர்மனுதாரரின் எதிர்உரையில் தெரிவித்து வாதிடப்பட்டுள்ளது.

6.3. 2-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் காலதாமத மனு மற்றும் அபேட்மெண்ட் ரத்து மனுவில் 4 முதல் 6 எதிர்மனுதாரர்களாக உள்ளனர். 2-ம் பிரதிவாதியின் இறப்பு மனுதாரர்களுக்குத் தெரியாது என்னும் சங்கதிகளைப் பொறுத்து தீர் முடிவிற்கு வருவதற்கு 2-ம் பிரதிவாதியின் வாரிசுகளும் அவசிய மற்றும் தேவையான தரப்பினர்கள் ஆவார்கள். ஆகவே அவர்களை இம்மனுவில் சேர்த்தது தவறு என்ற 3-ம் எதிர்மனுதாரரின் கோரிக்கைகள் சட்டப்படி நிலைக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.4. 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பெயருக்குப் பின்னால் இறப்பு என குறிப்பிட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றம் இதுவரை திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்காத நிலையில் இறப்பு என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில் புதிதாக தாக்கல் செய்யப்படும் இடை மனுக்களில் இறப்பு என குறிப்பிடுவதில் தவறு ஏதும் இல்லை. வழக்குரையில் திருத்தம் செய்ய மட்டுமே நீதிமன்றத்தின் அனுமதி தேவை. எனவே 3-ம் எதிர்மனுதாரரின் மேற்படி ஆட்சேபணையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 2-ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்த்து வழக்கை மேல்நடத்த வாதிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்கவேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.12.11 18:23:06 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.12.11 18:23:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

இ.ம.எண்.2/2023

இன்

அ.வ.எண்.239/2010

________________ உத்தரவு

நாள் : 01.12.2023